KERATAN AKHBAR : TAMIL NESAN

TARIKH : 8 OKTOBER 2013

M/S : 3

ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரை பொதுச் சேவை ஆணையத்தில்

# 20 லட்சம் பேர் விண்ணப்பம்!

-டான்ஸ்ரீ மாமூட் அடாம்

8-10-2013 M/S 3 Tamil Nesan



**மலாக்கா, அக்.8-**

பொதுச்சேவை ஆணையத்தில் உள்ள பல துறைகளில் ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை சுமார் 20 லட்சத்திற்கும் மேற்பட்டோர் விண்ணப்பம் செய்துள்ளனர் என்று பொதுச்சேவை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார்.

இதுவரை முதல் ஒன்பது மாதத்தில் கிடைத்த விண்ணப்பங்களிலேயே இதுதான் அதிகமான எண்ணிக்கை. அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் அதிகமான வாய்ப்புகளில் மக்கள் அனைவரும் இந்த பொதுச்சேவை ஆணையத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்," அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் வழங்கும் அதிக வருமானமும் ஏகப்பட்ட சலுகைகளும் அதிகமாக இருப்பின் அவர்கள் தொடர்ந்து தங்களை இந்த பொதுச்சேவை ஆணையத்தில் பதிவு செய்து வருகின்றனர்" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இரவு நேரங்களில் நேர்முகத் தேர்வுகளை வைப்பதும் வார இறுதியில் வைப்பதும் தான் விண்ணப்பத்தின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதற்கு காரணம் என்று அவர் சொன்னார்.

விண்ணப்பம் செய்த எண்ணிக்கையில் 16 லட்சத்து 20 ஆயிரம் பேர் மலாய்க்காரர்கள், 137,562 பேர் சபா மாநிலத்தை சேர்ந்த மலாய்க்காரர்கள், 103,410 சரவாக் மாநில மலாய்க்காரர்கள், 69,865 இந்தியர்கள், 40,892 சீனர்கள் மற்றும் மீதமுள்ளோர் பிற இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர் என அவர் குறிப்பிட்டார்.

இந்த எண்ணிக்கையின் மூலம் சுமார் 69,328 பேர் மலாக்கா மாநிலத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்கள் ஆவர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

சுமார் 126,487 பேரை பொதுச் சேவை ஆணையம் நேர்காணல் செய்துள்ளது. அவர்களுள் 29,009 பேரை நிரந்தரமாக நியமனம் செய்துள்ளது. மீதம் உள்ள 14,445 பேரை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்துள்ளது என்று அவர் கூறினார்.

இவ்வருட இறுதிக்குள் 80,000 ஊழியர்களை நிரந்தரமாக நியமனம் செய்யப்படுவர் என்று அவர் தெரிவித்தார்.

TAMIL NESAN

8.10.2013

M/S : 3

# 2 JUTA PERMOHONAN DI SURUHANJAYA PEKHIDMATAN AWAM.

Dari bulan Januari hingga September Suruhanjaya Perkhidmatan Awam S.P.A menerima lebih 2 juta permohonan untuk jawatan awam. Pengerusi Suruhanjaya Perkhidmatan Awam S.P.A, YBhg. Tan Sri Mahmood Adam berkata , ini adalah jumlah permohonan yang paling banyak diterima dalam tempoh 9 bulan ini oleh S.P.A semasa Persidangan di sebuah hotel, Bandar Hilir Melaka. Beliau berkata orang ramai sekarang semakin percaya kepada kepada perkhidmatan yang ditawarkan oleh agensi- agensi berkenaan. Gaji dan keistimewaan yang diberi oleh kerajaan mendorong masyarakat memohon jawatan awam. Walaupun permohonan banyak, S.P.A akan memilih calon yang berkualiti dari segi akademik. Daripada permohonan tersebut sebanyak 69,865 adalah Kaum India dan 40892 pula Kaum Cina. Sekaligus ,sebanyak 69,328 pemohon adalah dari Negeri Melaka. Beliau turut memberitahu, Suruhanjaya Perkhidmatan Awam telah menemu duga sebanyak 126,487 calon dan daripada jumlah tersebut sebanyak 29,009 calon dilantik tetap sebagai penjawat awam ,baki 14,445 calon pula dilantik dalam kontrak.